தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1978 செப்டம்பர் 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Rate of Interest for House Building Loans.

* 11 *Q.*—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have decided to charge a lesser rate of interest than the rate which prevailed before in the case of house building loans received from the Government by Government servants, after 1st April 1977;

(*b*) if so, the rate of interest that will be fixed;

(*c*) whether any request has been made to the Government that this concession should be extended to those who had received loan prior to 1st April 1977; and

(*d*) if so, the action taken thereon?

வீடு கட்டும் கடனுக்கு வட்டி விகிதம்.

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1977 க்குப் பின், அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்காக அரசிடமிருந்து கடனைப் பெறும் தொகைக்கு, முன்பு அமுலில் இருந்ததைவிட குறைவாக வட்டி கணக்கிடப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், என்ன வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படும்?

(உ) 1—4—1977 க்கு முன் கடன் பெற்றவர்களுக்கும் இந்த சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று அரசிற்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்டவாறு வட்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:—

(1) கடன் தொகை ரூபாய் 25,000 வரை $7\frac{1}{2}$ சதவிகிதம்.

(2) கடன் தொகை ரூபாய் 25,001 லிருந்து ரூபாய் 50,000 வரை 8 சதவிகிதம்.

(3) கடன் தொகை ரூபாய் 50,001 லிருந்து ரூபாய் 70,000 வரை 9 சதவிகிதம்.

(உ) ஆம்.

(எ) மேற்கண்ட கோரிக்கையை அரசு ஏற்க இயலாது என்று முடிவெடுக்கப்பட்டது.

Alternative Employment for Retrenched Last Grade Government Servants.

* 12 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Last Grade Government Servants retrenched due to the closure of Civil Supplies Checkposts requesting alternative employment;

(*b*) if so, the number of retrenched employees districtwise; and

(*c*) the action taken for providing alternative jobs?

வேலையிழந்த அரசு கடைநிலை ஊழியர்களுக்கு மாற்று வேலை

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதன் காரணமாக வேலையிழந்த அரசு கடைநிலை ஊழியர்களிடமிருந்து, அவர்களுக்கு மாற்று வேலை வேண்டுமென்று முறையீடு ஏதும் வந்துள்ளதா?